

தஞ்சாவூரில் பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறை முன்னாள் தலைவரும், தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினருமான முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் தொகுத்து பதிப்பித்த 'கலைஞர் ஒரு முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்ற நூலை உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் வெளியிட திருஞானசம்பந்தர் அறக்கட்டளைச் செயலர் எம்.ஜெய்லானி பெற்றுக் கொண்டார். இதில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மேயர் சண்.ராமநாதன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) கோ.பன்னீர் செல்வம் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். வா.மு.சே.முத்துராமலிங்கஆண் டவர் ஏற்புரையாற்றினார். திராவிடக் கருத் தியல் ஆசிரியர் சங்க நிர்வாகி பெரி. கபிலன் வரவேற்றார். எழுத்தாளர் சா.அடைக்கலம் நன்றி கூறினார். நிகழ்ச்சியை தமிழ்ப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் தெ. வெற்றிச்செல்வன் தொகுத்து வழங்கினார்.

# சிந்தனையை சட்டமாக்கி மக்களுக்கு வாழ்வளித்தவர் கலைஞர்!

## தஞ்சையில் அமைச்சர் கோவி. செழியன் பேச்சு!

*தஞ்சாவூர், ஜூன் 10 -*

சிந்தித்து எழு தியதை, ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு, அதை சட்ட மாக்கி, மக்களுக்கு வாழ்வ ளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்று உயர் கல்வித் துறை அமைச் சர்கோவி.செழியன் தெரி வித்தார்.

தஞ்சாவூரில் பச்சையப் பன் கல் லூரி தமிழ்த் துறை முன்னாள் தலைவரும், தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பின ருமான முனைவர் வா.மு. சே. முத்துராமலிங்க ஆண் டவர் தொகுத்து பதிப்பித்த 'கலைஞர் ஒரு முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற நூலை வெளியிட்ட அவர் மேலும் பேசியது:



முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்கள் எழுதும் போது உருவான சிந்த னையைத் திரைப்பட மாக் கினார். கால ஓட்டச் சூழ்நி லையில் அரசியலில் வெற்றி பெற்று முதல்வரா கிறார். அதன் பிறகு அன் றைக்கு எழுதிய அதே தாக் கம், அவரது உள்ளத்தில் இருந்ததால், பிச்சைக் காரர்கள் மறுவாழ்வு திட் டத்தை ஆட்சி அதிகாரத் துக்கு வந்த பின்னர் செயல் படுத்தினார். நினைத் ததை எழுதுவது, அதைச் சட்ட மாக்கி, மக்களுக்கு வாழ்வ ளிப்பது என்ற கொள் கையை கருணாநிதிகடைப் பிடித்தார்.

அப்படிப்பட்ட ஆளுமை மிக்க தலைவரைப் பற்றி நூலாசிரியர் தொகுத்து வழங்கியுள்ளார்.

நாம் மனிதனாக வாழ வும், உணர் வோடு இருக்க வும் என்பதற்கான அடை யாளம் தொகுத்துவழங்கப் பட்டுள்ளது. பெரியாரின் கொள்கைகள், அண்ணா வின் சித்தாந்தங்கள், கலை ஞரின் தத்துவங்களைத் தொகுத்து வழங்குவ தற்கான பெரு முயற்சியாக இந்நூல் உள்ளது என்றார் அமைச்சர். இந்நூலை திரு ஞான சம்பந்தர் அறக்கட் டளைச் செயலர் எம். ஜெய்லானி பெற்றுக் கொண் டார். சட்டப்பே ரவை உறுப்பி னர்கள் துரை. சந்திரசேகரன், டி. கே.ஜி. நீலமேகம், மேயர் சண். ராமநாதன், தமிழ்ப் பல்கலைக்க ழகப் பதிவா ளர் (பொ) கோ. பன் னீர் செல்வம் ஆகியோர் வாழ்த் துரையாற்றி னர். வா.மு. சே.முத்து ராமலிங்கஆண் டவர் ஏற்புரையாற்றினார். முன்னதாக, திராவிடக் கருத் தியல் ஆசிரியர் சங்க நிர்வாகி பெரி. கபிலன் வர வேற்றார். நிறைவாக, எழுத்தாளர் சா. அடைக்கலம் நன்றி கூறி னார். நிகழ்ச்சியை தமிழ்ப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் தெ. வெற்றிச் செல்வன் தொகுத்து வழங் கினார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே மூன்று கூரை வீடுகள் தீயில் எரிந்து சேதம் ஆனதையடுத்து தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களை விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து அவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வட்டாட்சியர் துரைச்செல்வன் உள்ளனர்.

### செஞ்சி அருகே மூன்று கூரை வீடுகள் தீயில் எரிந்து சேதம்

# தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து வழங்கினார்!

*செஞ்சி, ஜூன் 10 -*

செஞ்சி அருகே மூன்று கூரை வீடுகள் தீயில் எரிந்து சேதம் ஆனதையடுத்து தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களை விழுப்புரம் வடக்கு மாவட் டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து அவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கி னார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆர். நயம்பாடி ஊராட்சிபசு மலை தாங்கள் கூட்ரோடு அருகே சவுட்டூர் கிராமம் உள்ளது.

இப்பகுதியில் 20க்கும் மேற்பட்ட மலைவாழ் மக் கள் தங்களது குடும்பத்து டன் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் இக்கு குடும்பத்தினர் சிலர் ரெட் டணை அருகே உள்ள ஆல கிராமம் கிராமத்தில் தங்க ளது குலதெய்வமான கன்னிமார் கோவில் சிலை வைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சென்று விட்டனர்.

இந்நிலையில் அப்பகு தியில் திடீரென மின்கசிவு ஏற்பட்டு ஒரு கூரை வீடு பற்றி எரிந்தது. தொடர்ந்து அருகில் இருந்த கூரை வீடு களும் தீப்பற்றி எரிந்தன.

தீ விபத்து குறித்து அரு கில் இருந்தவர்கள் செஞ்சி தீயணைப்பு நிலையதிற்கு தகவல் தெரிவித்தனர்.தக வல் அறிந்த தீயணைப்பு துறையினர் சம்பவ இடத் திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். ஆனால் அதற்குள் அப்பகுதியில் இருந்த மூன்று கூரை வீடு கள் முழுவதும் எரிந்து சாம் பல் ஆனது..

இந்த தீ விபத்தில் லட் சுமி, உண்ணாமலை, தேன்மொழி ஆகியோர் கூரை வீடுகள் முழுவதும் தீயில் எறிந்து சாம்லாகின.

தீ விபத்து குறித்து தக வல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப் பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தீ விபத்து நடந்த பகுதிக்கு நேரில் சென்று தீ விபத்தில் பாதிக் கப்பட்ட மலைவாழ் மக் களை நேரில் சந்தித்து ஆறு தல் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு வசிக் கும் மலைவாழ் மக்களின் 21 குடும்பங்களுக்கு அரசு மூலம் கட்டப்படும் கான்கி ரீட் வீடுகள் கட்டுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

மேலும் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களுக்கு அரிசி, காய்கறிகள், மளிகை சாமான்கள் உள்ளிட்ட நிவாரண உதவி பொருட் களை விழுப்புரம் மாவட் டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், செஞ்சி வட்டாட் சியர் துரைச்செல்வன், ஒன் றிய கவுன்சிலர்கள் புவனா செந்தில் குமரன் ,சீனிவா சன்,வருவாய் ஆய்வாளர் சத்யா, கிராம நிர்வாக அலு வலர் மணிகண்டன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கங்குல்சாமி, ஒன் றியஅவைத் தலைவர் வாசு, துணை செயலாளர் செல்வ மணி,மணிமாறன், பழனி, செந்தில்,விவேகானந்தன், சவுட்டூர் ரங்கநாதன் உள் ளிட்டோர் உடன் இருந்த னர்.



கடலூர் மண்டல போக்குவரத்து தொ.மு.ச. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு, கடலூர் போக்குவரத்து பணிமனை முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் தொழிலாளர்கள், பொதுமக்களுக்கு இனிப்புகள், அன்னதானம் வழங்கப்பட்டது. போக்குவரத்து தொ.மு.ச மண்டல தலைவர் பி.பழனிவேல் தலைமை தாங்கினார். மண்டல பொதுச் செயலாளர் தங்க.ஆனந்தன், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஜெயராஜ், பக்கிரிசாமி, பாலவிநாயகம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### பேராசிரியர் அப்துல் காதர் சிறப்புரை! சி.கோபி நிகழ்ச்சி ஏற்பாடு!

# கே.வி.குப்பம் துரை சாம்பசிவம் புகழஞ்சலி கூட்டம்!

## ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. பங்கேற்பு!

*வேலூர், ஜூன் 10 -*

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் தொகுதியில் முன்னாள் பெருந்தலைவர் துரைசாம்பசிவம் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் முன்னிட்டு, புகழஞ்சலி கூட்டம் 12.6.2025 வியா ழக்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில், பெரு மாங்குப்பம் துரை தோட் டத்தில், ஒன்றிய கழக செயலாளர் கு. சீதாராமன் தலைமையில் நடைபெறு கிறது.

ஒன்றிய குழு பெருந்த லைவர் லோ. இரவிச்சந்தி ரன் (ஒன்றிய கழக செயலா ளர்), கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் இரா. ஜெயாமுருகேசன், ஒன்றிய அவைத்தலைவர், ஒன்றிய கவுன்சிலர் இரா. தாமேதரன் ஆகியோர் முன்னலை வகிக்கின்றனர். முனைவர் பேராசிரியர் சா. உதயா சூரியன் தஞ்சை தமிழ் பல்கலைகழகம் மேனாள் தமிழ் துறை தலைவர்,முனைவர் சா.உத யசூரியன் வரவேற்புரை ஆற்ற, மாநில திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேர வையின் துணை செயலாள ரும், முரசொலி தமிழ் மன்ற நிறுவனருமான கே.வி.குப்பம் சி.கோபி ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ளார்.

வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்த குமார் எம்.எல்.ஏ., வேலூர் நாடாளுமன்ற உறுப்பி னர், மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் தலைவர் டி.எம்.கதிர்ஆனந்த் ஆகி யோர் உரை நிகழ்த்து கின் றனர்.

பேராசிரியர் கவிக்கோ. அப்துல் காதர் சிறப்புரை ஆற்றுகிறார்.

திராவிட நட்பு கழக மாநில தலைவர் சீர்மிகு சிங்கராயர் கழக புரவலர் துரைசிங்காரம், திராவிடர் கழக மாவட்ட காப்பாளர் வி.சடகோபன், வே.கு.ரா சுந்தரவடிவேல், க. தயாள மூர்த்தி, வ.த.சிவக்குமார், வ.த.ஜெயக்குமார், மு.அசோக்குமார், வெ. ஜெயராஜ், பாரதி வெங்க டேசன், கவிதா சுதாசேகர், நிர்வாகிகள், ஏ. ஏழ்மைநா தன், நளின ராமமூர்த்தி, உதயசூரியன், கவுன்சிலர் வேலு, சி.வேலு, பாரதி, எல்.என் நாராயணன், அ.ச.அன்பழகன், கவிதா சிதம்பரம், வழக்கறிஞர் கள் கோ.விஜக்குமார், சு.மோகன்ராஜ், மரு. தூய வன். தட்சிணா , சே. வண்ட ரா.சத்யா, இரகு, தாமோ.மேகன் தாமோ. இரவி, இரா.முரளி, கா.சுரேஷ், ஆசிரியர் இரவி, வீரா.குமரன், அணில்குமார், ரவீந்தர், ச.சிவா, மு.பிரபு, கபில் தேவ் இளைஞரணி சே. மோகன், ஏ.வி.எம் பிரபு, சிரிதர், மாணவரணி, சி.ரஞ்சித்குமார். செஞ்சி பிரகாசம், சிரிதர், ப. விஜய், கார்த்திக் (ம) பலர் கலந்துக் கொள்கின்றனர். புகழஞ்சலி ஏற்பவர்கள் : மனைவி சா. அரங்கிநா யகி, மகன்கள் முனைவர் சா. உதயசூரியன், முனை வர் சா.முத்தழகு, சா.உதய சந்திரன், கல்வியாளர் சா. பரிமளம், சா.அல்லிராணி (மகள்), சா.குமரன், சா. அகத்தியன், மற்றும் பலர் பங்கேற்றனர். மாவட்ட இலக்கிய அணி அமைப்பா ளர் சா. பரிமளம் நன்றி கூறுகிறார். இந்நிகழ்விற் கான ஏற்பாடுகளை கே.வி. குப்பம் முரசொலி தமிழ் மன்றம் ஏற்பாடு செய்து வருகிறது.

### செஞ்சி ஒன்றியத்தில்

# மகளிர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, ஜூன் 10 -*

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நரசிங்க ராயன்பேட்டை ஊராட்சி எம்ஜிஆர் நகர் மாரியம் மன் கோவில் அருகில் சமூக நலத்துறை சார்பில் மகளிர் நல வாரியத்தில் கைம்பெண்கள், ஆதர வற்ற மகளிர், பேரிளம் பெண்கள், ஆகியோர்க ளுக்கு உதவிடும் நோக்கில் சுயதொழில் மானியத்து டன் வங்கி கடன், ஓய்வூதி யம், அனைத்து திட்டங் களில் முன்னுரிமை அளிக் கும் வகையில் கைம்பெண் கள் மற்றும் ஆதரவற்ற மக ளிர் நல வாரியத்தில் உறுப் பினர் சேர்க்கை யினை துரி தப்படுத்தும் வகையில் புதிய உறுப்பினர் சேர்க் கும் சிறப்பு முகாம் நடை பெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன் றிய பெருந்தலைவர் விஜய குமார் தலைமை தாங்கி னார். மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை முன் னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலை வர் பிலால் அனைவரை யும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ் தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மகளிர் நல வாரி யத்தில் செயல்படுத்தப் படும் பல்வேறு சிறப்பு திட் டங்களை எடுத்துரைத்தும், மகளிர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர் சேர்க் கும் பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மேல்மலை யனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழி யன், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர், ஊராட்சி செயலாளர் சிவக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், வனக் குழு தலைவர் ராமு, மாவட்டப் பிரதிநிதிகள் அய்யாதுரை, கதிரவன், தொண்டரணி பாஷா, வாசு, பழனி, செந்தில் உள் ளிட்டோர் கலந்து கொண் டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுச்சேரி ஆர்.வி.ஜானகிராமன்

**ஜூன் 10 (2019)**



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கி, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளராக பொறுப்பு வகித்து, மாநிலத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஐந்து முறை நெல்லித்தோப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்ற இவர், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். 1996ல் முதல்வராகி, மாநில முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

2005ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"எளிமைக்கு இலக்கணம் தேடினால் திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி. ஜானகிராமன் தான்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

"புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ந்து இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிட இயக்கத்தின் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் – ஓடி ஓடி உழைத்தவர் திரு ஜானகிராமன்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. பொற்கோ

**ஜூன் 10 (2014)**



இளம்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் சென்று கொள்கை வகுப்பு நடத்த உற்சாகத்தோடு உழைத்ததன் பயனாக மும்பைத் தமிழர்களின் நண்பராய், குடும்பத்தில் ஒருவராய் மதிக்கப்பட்டவர்.

1965ல் மகாராஷ்டிராவில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது,அவர்களுக்காக போராடியவர். அதேநேரத்தில் பால்தாக்கரே அவர்களுடன் நட்பு வைத்திருந்தவர். அதே பால்தாக்கரே, 2002ல் ஓர் விழாவில் 'சமுதாயச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி பாராட்டினார். 'தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு', 'தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு' ஆகிய அமைப்புகளை தொடங்கி, அதன் தலைவராக இருந்து மும்பைத் தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவர்.

"த.மு. பொற்கோ அவர் மும்பை மாநகரச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், என்னை அழைத்து பல நிகழ்ச்சிகளை நடத்தியதும், கழகத்திற்காக தேர்தல் நிதி திரட்டிக் கொடுத்ததும் என் நினைவுக்கு வருகிறது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**